# <u>சாதாரண கூட்டம்</u>

2026–ம் ஆண்டு, ஜீலை மாதம் 09–ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் , நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>பொருள் எண் 1</u>

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் ஜீன் 2026 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.1554/2014/சி1**

**தீர்மான எண்.66 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

<u>பொருள் எண் 2</u>

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் ஒப்பந்த்தாரர்களாக பணிபுரியும் M/S.தங்கமணி & கோ என்ற நிறுவனம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்திற்கு தொழிலாளர் சேம நல நிதி தொகை (Central Act 19 of 1952)–ன்படி ரூ.214693/– செலுத்தப்பட வேண்டும் என உதவி ஆணையர் (தொழிலாளர் சேம நல நிதி தொகை) சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே M/S.தங்கமணி & கோ என்ற பெயரில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையில் ரூ.80671/– பிடித்தம் செய்யவும் மீத தொகை ரூ.134022/–ஐ 2023–2024 ஆம் ஆண்டின் வைப்பு தொகையில் சரி செய்து வங்கி வரைவேலையாக உரிய நிறுவனத்திற்கு அனுப்ப அவசர அவசியம் கருதி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

அவசர அவசியம் கருதி மேற்படி தொகையை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.314/2026/சி1**

**தீர்மான எண்.67 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 3</u>

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிப்பேராணை மனு எண் wp(MD) Nos 29035, 2917& 30354 of 2024 and wmp(MD) Nos 29035& 24599 of 2024 & 286 of 2025இல் பிறப்பிக்கப்பட ஆணை நாள்: 23.01.2026, அரசியல் கட்சிகள் மற்றும் பிறரால், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற அரசு துறைகளுக்குச் சொந்தமான இடங்களில், உரிய அனுமதி பெற்றே தற்காலிக கொடிக்கம்பங்கள் அமைக்கப்பட வேண்டும் என மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை அமர்வினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.629 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள்: 16.09.2025ன் படியான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் மேற்படி பொருள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் தலைமையில் 09.03.2026ம் தேதியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், மேற்படி WP No.29035. 2917 of 2024. வழக்கின் அடிப்படையிலும், அரசாணை எண்.629, நாள்.16.09.2025ன் படியும், அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள், தற்காலிக, கொடிக்கம்பங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கவும், அனுமதியின்றி வைக்கப்படும் தற்காலிக கொடிக்கம்பங்களுக்கு அபராதம் விதித்து அவற்றை அகற்றுவதற்கும், நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட, நகராட்சி சாலை மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில், தற்காலிக கொடிக்கம்பங்கள் நிறுவ கொடிக்கம்பத்திற்கு நாளொன்றுக்கு ரூ.10/– கட்டணம் வசூல் செய்யவும், அனுமதியின்றி கொடிக்கம்பங்கள் வைப்போரிடமிருந்து அபராதக் கட்டணமாக கொடிக்கம்பம் ஒன்றுக்கு ரூ.20/– வசூல் செய்யவும், அனுமதியின்றி வைக்கப்பட்ட கொடிக்கம்பங்களை அகற்றுவதற்கு உண்டான தொகையினையும், சாலை சீரமைப்புக் கட்டணத்தையும், வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.68 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 4**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொது சுகாதாரம் பூச்சிகள், மற்றும் தண்ணீர் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், தடுக்கும் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் 30 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே நோய் தொற்று தடுப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள, 01.03.2026 முதல் 31.05.2026 முடிய மூன்று மாதங்களுக்கு தற்காலிக களப்பணிப் பணியாளர்களை பணி நீட்டிப்பு செய்யவும் மூன்று மாதங்களுக்கான செலவினத்தொகை ரூ.12,00,000/- ஆகும் எனவும், இச்செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.586/2025/எச்1**

**தீர்மான எண்.69 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 5**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள 60HP மோட்டார் எண் 1 ன் டர்பைன் பம்பில் ஏற்பட்ட பழுது காரணமாக இயக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டதால் குடிநீரினை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ஏற்றப்படுவது தடைபட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்கப்படுவது தடைபடும் என்பதால், உடனடியாக மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய ரூ.52,000/-ல் பணி மேற்கொள்ள 09.01.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | கே. தனபாலன்,<br>34/எ6, காங்கேயம் ரோடு 2<br>ஈரோடு. | ரூ.51330/- |
| 2) | மணிவேல் அன் கோ,<br>1, கல்யாணசுந்தர தெரு,<br>மேலாகவுண்டம்பாளையம்,<br>ஈரோடு 638 002 | ரூ.53601/- |
| 3) | எனர்ஜி எலக்ட்ரிக் ஒர்க்ஸ்<br>103./2, பழைய பவானி பைபாஸ் சாலை,<br>ஈரோடு -638 102 | ரூ.58265/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை குடிநீர் நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.61/2026/இ1**

**தீர்மான எண்.70 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண் 6**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அக்ரஹாரம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 60HP மின்மோட்டார் எண் 1ல் உள்ள HSC பம்பு பியரிங், மோட்டார் ஹியரிங் மற்றும் இதர பழுது காரணமாக இயக்கப்படாத நிலையில் உள்ளதால், பழுதுகளை சரிசெய்து இயக்கத்தில் வைக்கப்பட வேண்டியதன் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய ரூ.39,000/-ல் பணி மேற்கொள்ள 23.01.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | கே. தனபாலன்,<br>34/எ6, காங்கேயம் ரோடு 2<br>ஈரோடு. | ரூ.39000/- |
| 2) | ஆஞ்சநேயா ரீவைண்டிங்,<br>எண்30, எஸ்.பி.ஆர். காம்பளக்ஸ்,<br>நாச்சியப்பா 2-வது தெரு,<br>ஈரோடு 638001 | ரூ.39600/- |
| 3) | M.K.S ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>31, அகில்மேடு 7வது தெரு,<br>ஈரோடு -1 | ரூ.40500/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை குடிநீர் நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.97/2026/இ1**

**தீர்மான எண்.71 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண் 7**

பள்ளிபாளையம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பிரிண்ட் எடுப்பதற்கு பிரிண்டர் இல்லாத காரணத்தால் புதியதாக கலர் பிரிண்டர் மற்றும் பிரிண்டருக்கு தேவையான ஸ்டேப்லைசர் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,80,000/-ல் பணி மேற்கொள்ள 23.01.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ்,<br>28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு,<br>சிட்ரா எதிர்புறம், கரூர்-639 001. | 280000.00 |
| 2) | சி.எஸ்.இன்போடெக்,<br>7/D/E-O, 79-N , ராமகிருஷ்ணாபுரம் மேற்கு, கரூர்-639001 | 281180.00 |
| 3) | ஸ்டெப்அப் டிஜிட்டல் வேர்டு,<br>14/33, STV நகர், 3வது கிராஸ், நவமேடு,<br>பீளமேடு, கோயம்புத்தூர்-641004. | 281770.00 |

**அலுவலக குறிப்பு :**

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், கரூர் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண்.105/2026/இ1**

**தீர்மான எண்.72 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

பள்ளிபாளையம் நகராட்சி கல்வி நிதி 2025-26ன் கீழ், கீழ்கண்ட பணிக்கு 09.01.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>கல்வி நிதி 2025-26</u><br><br>பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் அடிப்படை வசதிகளான Bell Syestem, Fire Extinguisher, Green ChalkBoard, R.O.System மற்றும் UPS அமைக்கும் பணி | 8,00,000 | M/S. RS Enterprises<br>4, 25வது கிராஸ் தெரு,<br>தில்லை கங்கா நகர்,<br>நங்கநல்லூர்,<br>சென்னை | 0.51% குறைவு |
| | | | M/S.SRI Srinivasaa Traders<br>1414/3, கம்பன் நகர்,<br>புதுக்கோட்டை | 27.85% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.51% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/S RS Enterprises சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1461/2025/இ1**

**தீர்மான எண்.73 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 9</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் 2025-26 ஆம் ஆண்டின் கீழ், கீழ்கண்ட பணிக்கு 12.03.2026-ம் தேதி வெள்ளிக்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் 2025-26</u> பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான எலந்தக்குட்டை பஞ்சாயத்து சின்னாக் கவுண்டம்பாளையம் தரிசு நிலத்தில் புதியதாக பிராணிகள் வதை தடுப்பு மையம் **(ABC Center)** அமைக்கும் பணி | 46,00,000 | M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ்,<br>81, காந்திபுரம் முதல் தெரு,<br>பள்ளிபாளையம் | -0.15% குறைவு |
| | | | GSC Technology & Services,<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு,<br>குமாரபாளையம் | 6.84% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

1.மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் -0.15% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ், பள்ளிபாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணிஉத்திரவு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

2.மேலும் இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் ரூ.15.28 தமிழ்நாடு விலங்குகள் நல வாரியமும், மீதமுள்ள தொகை ரூ.30.72 த்தினை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.144/2026/இ1**

**தீர்மான எண்.74 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் 10

பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் RICOH IM C2000 பிரிண்டருக்கான கலர் மற்றும் கருப்பு டோனர்கள் முடிவடைந்து விட்டதால் பிரிண்ட் எடுப்பதற்கும், ஜெராக்ஸ் எடுப்பதற்கும் இயலாத நிலையில் உள்ளது. ஆகையால் புதியதாக கலர் டோனர்கள் 2 செட் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக் கொள்வதற்கு 17.11.2025 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ்,<br>28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு,<br>சிட்ரா எதிர்புறம், கரூர்–639 001. | 111234 |
| 2) | சி.எஸ்.இன்போடெக்,<br>7/D/E–O, 79–N , ராமகிருஷ்ணாபுரம் மேற்கு,<br>கரூர்–639001 | 113238 |
| 3) | இன்–சைனிக்,<br>172/3, ராமலிங்கம் ரோடு மேற்கு.<br>ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்–641 002. | 115775 |

**அலுவலக குறிப்பு :**

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், கரூர் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், செலவினத்தை பொதுநிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**கோப்பு எண்.518/2025/இ1**

**தீர்மான எண்.75 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் 11

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 94 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. தற்போது எதிர்வரும் கோடைகாலத்தில் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்காக கூடுதலாக 5 எண்ணிக்கை 5 H.P மின்மோட்டாரினை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து அவ்வப்போது ஏற்படும் பழுதான மின்மோட்டார்களுக்கு மாற்றாக புதியதாக கொள்முதல் செய்யும் மின்மோட்டாரினை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மற்றும் அதற்குண்டான உபகரணங்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/–ஐ குடிநீர் நீதியில் லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.76 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் 12

பள்ளிபாளையம் நகராட்சியின் காசாளர் பிரிவின் வரிவசூல் செய்யப்படும் இடத்தில் உள்ள மேஜைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தொகைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இயலாத நிலை உள்ளது. மேலும், தொகை எண்ணும் இயந்திரமும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட இரண்டு பணிகளையும் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.77 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 13**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வரியில்லா இனம் (பெண்கள் கழிப்பிடம்) பெரும்பாறைக்காடு பெண்கள் கழிப்பிடம் 3 ஆண்டுகளுக்கு 01.04.2024 முதல் 31.03.2027 வரை பொது ஏல அறிவிப்பு வழங்கப்பட்டு அதில் 14.03.2024 முதல் 12.07.2024, 13.08.2024 12.09.2024 வரை 4 தேதிகளிலும் பொது ஏலம் நடைபெற்றது. தினசரி நாளிதழில் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் 4 தேதிகளிலும் பொது ஏலம் விடப்பட்டதில், ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை. இந்த பெரும்பாறைக்காடு பெண்கள் கழிப்பிடம் சமுதாயத்திற்குட்பட்ட கழிப்பிடமாக உள்ளதால் அந்தப்பகுதியில் உள்ள சமுதாய மக்கள் கட்டணம் செலுத்தி உபயோகப்படுத்திக்கொள்ள முன் வரவில்லை, இதனால் ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை என்பது தெரியவருகிறது. எனவே சமுதாய கழிப்பிடத்தை இலாப நோக்கத்துடன் பார்க்காமல் சேவை அடிப்படையில் அப்பகுதி மக்கள் கட்டணமில்லா கழிப்பிடத்தை உபயோகப்படுத்திக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட பொருளானது தீர்மான எண்.190 கோப்பு எண்.1141/2024/இ1, பதியப்பட்டுள்ளது அதில் தவறுதலாக பெரும்பாறைகாடு பெண்கள் கழிப்பிடம் என்பதற்கு பதிலாக பெரியகாடு காமராஜ் நகர் பெண்கள் கழிப்பிடம் என்று தவறாக பதியப்பட்டுள்ளது. அதை முறையே சரிசெய்யப்பட்டது மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண்.147/2026/அ1**

**தீர்மான எண்.78 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 14**

பள்ளிபாளையம் நகராட்சி தண்ணீரை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல பொருத்தப்பட்ட மின்மோட்டாரின் செயல்திறன் குறைவாக உள்ளதால் குடிநீர் தினசரி விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. மேலும், கோடை காலம் என்பதால் நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, 60HP மின் மோட்டாருடன் கூடுதலாக 25HP மின் மோட்டார் ஒன்று புதியதாக கொள்முதல் செய்து தலைமை நீரேற்று நிலையத்தில் பொருத்தும் பணிக்கு ரூ.7,00,000/-ல் பணி மேற்கொள்ள 09.03.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.S. யுவராஜ்,<br>66E3H, அய்யன் தோட்டம்,<br>பி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் | ரூ. 695193/- |
| 2) | தமிழ்நாடு எண்டர்பிரைசஸ்,<br>16-A-2, இளங்கோ தெரு, எடப்பாடி மெயின் ரோடு,<br>குமாரபாளையம். | ரூ. 702932/- |
| 3) | Zenith Tubes & Pipes<br>2/58, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | ரூ. 733158/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை குடிநீர் நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.309/2026/இ1**

**தீர்மான எண்.79 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**<u>பொருள் எண் 15</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு தினசரி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான தண்ணீர் சமய சங்கிலி காவேரி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல், மே மாதங்களில் ஆற்றில் நீர் வரத்து குறைக்கப்படுவதால், தினசரி குடிநீர் வழங்கப்படுவதில் சிரமம் ஏற்படுகிறது. தண்ணீர் வரத்து குறைக்கப்படுவதால் 60HP மின் மோட்டரினை இயக்க முடியாத சூழல் ஏற்படுகிறது. இதனால் ஆற்றின் நடுவே, தண்ணீர் ஓட்டம் உள்ள ஆழமான பகுதிக்கு நீர்மூழ்கி மின் மோட்டார்களை கொண்டு சென்று ஆற்றில் இறக்கி, அங்கிருந்து நகராட்சி வசம் உள்ள HDPE HOSE –கள் மூலம் தண்ணீர் சேகரிப்பு கிணற்றுக்கு இறைத்து, அதில் பெறப்படும் தண்ணீரை 60HP மின் மோட்டார் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று பொதுமக்களுக்கு தடையில்லாதவாறு குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் செலவினம் ரூ.1,50,000/–ல் பணி மேற்கொள்ள 23.02.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.S. யுவராஜ்,<br>66E3H, அய்யன் தோட்டம்,<br>பி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் | ரூ. 150000/– |
| 2) | தமிழ்நாடு எண்டர்பிரைசஸ்,<br>16–A–2, இளங்கோ தெரு, எடப்பாடி மெயின் ரோடு,<br>குமாரபாளையம். | ரூ. 153683/– |
| 3) | Zenith Tubes & Pipes<br>2/58, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | ரூ. 167654/– |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பட்டியல் தொகை குடிநீர் நிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.80 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**<u>பொருள் எண் 16</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.DMA/1795/2026–M1 நாள்.23.05.2026ன் சுற்றறிக்கையில் நகராட்சிப் பகுதிகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் படி தெரிவித்துள்ளதற்கிணங்க, பள்ளிபாளையம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் இயந்திரங்களில் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் பொதுநிதி 2026–27ன் கீழ் மேற்கொள்வதற்கு, 12.06.2026–ம் தேதி வெள்ளிக்கிழமை கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி 2026–27</u>**<br>பள்ளிபாளையம் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் உள்ள இயந்திரங்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3,85,000 | M/s. சக்தி அசோசியேட்ஸ்,<br>97எ, ஊஞ்சப்பாளையம்,<br>பூதபாடி, பவானி. | -0.58% குறைவு |
| | | | ஜிஎஸ்சி டெக்னாலஜி,<br>39டி, ஆர்.பி காம்பளக்ஸ்,<br>பள்ளிபாளையம் ரோடு,<br>குமாரபாளையம் – 638 183. | 2.34 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் −0.58% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s. சக்தி அசோசியேட்ஸ், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.653/2026/இ1**

**தீர்மான எண்.81 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 17**

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஆம் ஆண்டு,97 குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதியில் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 48வாக்குச்சாவடிகளில் வாக்குச்சாவடி எண் எழுதும் பணி உட்பட்ட வாக்குச்சாவடிக்குண்டான அனைத்து அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி மற்றும் சாய்வுதள வசதிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், மேலும் தேர்தல் நாளன்று வாக்காளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாமியான பந்தல் மாதிரி வாக்குச்சாவடி அமைத்தல், வாக்குச்சாவடிகளுக்கு தேவையான தடையின்றி மின்சார வசதி, கூடுதல் மேஜை மற்றும் நாற்காலிகள் (Tables & Chairs) Wheel Chair மற்றும் பிற வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5,00,000/−ல் பணி மேற்கொள்ள 15.04.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | M/s.யுவா பில்டர்ஸ்,<br>3/333, குள்ளநாய்க்கன் பாளையம்,<br>குப்பாண்டாம்பாளையம்,<br>குமாரபாளையம் | ரூ 500000/− |
| 2) | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு, காடப்பநல்லூர் (P.O),<br>பவானி | ரூ. 509103/− |
| 3) | M/s.VNP வைண்டிங் அன் டிரன்ஸ்,<br>காந்திபுரம் முதல் தெரு,<br>பள்ளிபாளையம் | ரூ. 523609/− |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை பொதுநிதியில் இருந்து வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.96/2026/இ1**

**தீர்மான எண்.82 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண் 18**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 சித்தி விநாயகர் கோவில் எதிரில் உள்ள இடமானது இந்நகராட்சிக்கு சொந்தமான இடமாகும். இவ்விடத்தில் 2022−2023 வரை வணிக வளாக கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த 2023−2024ஆம் ஆண்டு சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் கீழ் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணிக்காக 8 கடைகளும் இடிக்கப்பட்டு, தற்போது காலியிடமாக உள்ளது. மேற்கண்ட காலியிடத்தை அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் திருப்பணிக்குழு மற்றும் அப்பகுதி மக்கள் அவ்விடத்தை கோவில் பயன்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி கோரி நகர்மன்றத் தலைவரிடம் கடிதம் அளித்தனர். மேற்கண்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் அவ்விடத்தை கோவில் சார்பாக தற்காலிகமாக பயன்படுத்திக் கொள்ளவும், மேற்படி இடத்தில் சொந்தமான

எவ்விதமான கட்டிடங்களும் கட்டி நிரந்தரமாக பயன்படுத்தக் கூடாது எனவும், பள்ளிபாளையம் நகராட்சிக்கு இனிவரும் காலங்களில் ஏதேனும் தேவை ஏற்படின் அவ்விடத்தை நகராட்சி சார்பாக பயன்படுத்திக் கொள்ளும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்ட காலியிடத்தை அருள்மிகு சித்தி விநாயகர் கோவில் திருப்பணிக்குழு பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.745/2026/அ1**

**தீர்மான எண்.83 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 19**

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வரப்பெற உள்ளது. அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.தி1/6506/2025–ன் படி 3 எண்ணிக்கையில் (Double Lock) பூட்டு சாவியுடன் 250–எண்ணிக்கையிலான பூட்டு சாவி மற்றும் அனைத்து நிகழ்வுகளையும் ஒளிப்பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் பள்ளிபாளையம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கொள்ள பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.40,000/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.671/2026/எப்1**

**தீர்மான எண்.84 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 20**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய மற்றும் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 4 மின் மோட்டார்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 4 மின்மோட்டார்களை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கவும், மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர்கள் 7 பேரை ஒப்பந்த முறையில் நியமித்திடவும், நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் உள்ள பயோ கேஸ் பிளாண்டினை பராமரிக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்கள், பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்படும் அடைப்புகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு 2 பணியாளர்கள் நியமிக்கவும் (மொத்தம் 13 பணியாளர்கள்) ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (ஆகஸ்ட் 2026 முதல் அக்டோபர் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.9,30,000/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.358/2025/இ1**

**தீர்மான எண்.85 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 21**

பள்ளிபாளையம் நகராட்சியில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் பணியிடம் மட்டுமே உள்ள நிலையில், 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்க ஒப்பந்த முறையில் 4 பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பணிக்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (ஆகஸ்ட் 2026 முதல் அக்டோபர் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.3,40,000/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.360/2025/இ1

**தீர்மான எண்.86 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 22</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 1393 தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நிரந்தர மின்பணியாளர் எவரும் இல்லாததால், அனைத்து தெருவிளக்குகளையும் பராமரிக்க இயலாமல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த முறையில் 3 மின் பணியாளர்களை நியமிக்கவும், நகராட்சிக்கு சொந்தமான மினி எர்த் மூவர் ( JCB) வாகனத்தினை இயக்க 1 ஓட்டுநரை ஒப்பந்த அடிப்படையில் (மொத்தம் 4 பணியாளர்கள்) பணிகள் செய்வதற்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திரு.எஸ்.யுவராஜ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (ஆகஸ்ட் 2026 முதல் அக்டோபர் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.4,15,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்காணும் பணிக்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.359/2025/இ1

**தீர்மான எண்.87 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 23</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள 21 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்காக 93 விசைபம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விசைபம்புகளில் பழுது ஏற்பட்டால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீரல்லாத தண்ணீர் தேவை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், பொதுமக்களுக்கு தடையின்றி தண்ணீர் விநியோகம் செய்ய உடனுக்குடன் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஒரு வருடத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.88 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 24</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் உள்ள 1393 எண்ணிக்கையிலான மின் விளக்குகளை நகராட்சி மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் அதற்கு தேவையான மின் உதிரி பாகங்கள் மராமத்துப்பணிக்காக நகராட்சியால் ஒப்பந்த முறையில் கொள்முதல் செய்து தெருவிளக்கில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்ய தேவையான உதிரிபாகங்களை ஒப்பந்தம் மூலம் 2026-27 ஆம் ஆண்டிற்கு கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.89 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 25</u>

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பொதுமக்களுக்கு குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைக்கு பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் தண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்களுக்கு தண்ணீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய பழுதான குடிநீர் குழாய் மற்றும் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைக்கு பயன்படுத்தும் குழாய்களை உடனடியாக பழுது சரிசெய்வதற்கு தேவையான

பைப் மற்றும் இதர உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு ஒருமுறை வாங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.90 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 26</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18464/2023/DO1 நாள்.07.10.2025ன்படி, நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளில் குடிநீர் பணிகளினாலும் மற்றும் இயற்கை இடர்பாடுகளினாலும் பழுதடைந்த குண்டு, குழிகளை சீர்செய்ய இரண்டாம் நிலை நகராட்சிக்கு ரூ. 5,00,000/- ஐ பொதுநிதியில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குண்டு குழிகளை சீரமைப்பதற்கு 2026-27ஆம் ஆண்டிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 5,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.91 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 27</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டு பகுதிக்கும் அக்ரஹாரம் நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு சுத்திகரிப்பு மையங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீரானது வழங்கப்பட்டு வருகிறது. சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் நீர் நன்கு சுத்திகரிக்கப்பட்டு சிறந்த முறையில் குளோரினேசன் செய்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தற்போது மாதத்திற்கு இரண்டு சிலிண்டர்கள் (900kg) சிலிண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி2026-27ஆம் ஆண்டிற்கான 24 குளோரின் கேஸ் சிலிண்டர்கள் கொள்முதல் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட தொகையினை நகராட்சி குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.92 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 28</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் பகிர்மானக் குழாய் மற்றும் பிரதானக் குழாய்களில் பயன்படுத்தப்படும் சுலீஸ் வால்வுகள் அடிக்கடி பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்வதற்கு மிகவும் சிரமான சூழ்நிலை ஏற்பட்டு நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி வழங்குவதற்கு ஏதுவாக புதியதாக 42 சுலீஸ் வால்வுகள் கொள்முதல் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4,60,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.93 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 29</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 93 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. ஆழ்துளை குழாய் கிணற்றில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு,

பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, கூடுதலாக 5 எண்ணிக்கை 1.50 H.P மின்மோட்டாரினை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து அவ்வப்போது ஏற்படும் பழுதான மின்மோட்டார்களுக்கு மாற்றாக புதியதாக கொள்முதல் செய்யும் மின்மோட்டாரினை பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மற்றும் அதற்குண்டான உபகரணங்கள் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/-ஐ குடிநீர் நீதியில் லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.94 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 30**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறையில் 1 கணினியும், மற்றும் 1 மடிக்கணினியும், பொதுப்பிரிவில் 5 கணினிகளும், பொறியியல் பிரிவில் 4கணினிகள் மற்றும் 1 மடிக்கணினியும், பொது சுகாதாரப்பிரிவில் 2 கணினிகளும், நகரமைப்பு பிரிவில் 3 கணினிகளும், வரி வசூல் மையத்தில் 3 கணினிகளும் கணினிப்பிரிவில் 1 கணினியும் வருவாய் பிரிவில் 3 கணினிகளும் ஆக மொத்தம் 24கணினிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட கணிணிகளுக்கு ஒரு வருடத்திற்கு பொருத்தப்பட்டுள்ள (Anti Virus) காலம் முடிவடைந்துவிட்டது. மேலும் கணிணிகளில் உள்ள கோப்புகளை வைரசிடமிருந்து தொடர்ந்து பாதுகாக்க வசதியாக 24எண்ணிக்கை (Anti Virus) மென்பொருள் வாங்குவதற்கு ஆகும் செலவினம் தொகை ரூ.30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.95 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 31**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறையில் 1 கணினியும், பொதுப்பிரிவில் 3 கணினிகளும், பொறியியல் பிரிவில் 3 கணினிகளும், சுகாதாரப்பிரிவில் 1 கணினியும், நகரமைப்பு பிரிவில் 3 கணினிகளும், வரி வசூல் மையத்தில் 3 கணினிகளும் வருவாய் பிரிவில் 3 கணிணிகளும் ஆக மொத்தம் 14 கணினிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் HP Laser Jet P1108 பிரிண்டர்கள் 6 எண்ணிக்கையும், Ricoh Colour Printer-1 மற்றும் Ricoh 2501SP Black and White Printer-1 வரி வசூல் மையத்தில் 2 Dot Matric பிரிண்டர்களும் ஆக மொத்தம் 10 பிரிண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கான (AMC) ஆண்டு பராமரிப்பு வசதி முடிவடைந்த நிலையில், மேலும் தொடர்ந்து பராமரிக்க வசதியாக ஏப்ரல் 2026 முதல் மார்ச் 2027 வரை ஒரு வருட காலத்திற்கு (AMC) ஆண்டு பராமரிப்பு வசதி செய்ய ஆகும் செலவினம் தொகை ரூ.1,90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிக்கு நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.96 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 32**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஜீவாசெட் பகுதியில் 3 லட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. இம்மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவரின் ஒரு பகுதி சுவர் சேதமடைந்த நிலையில் உள்ளதால் அச்சுற்றுச்சுவரினை புதியதாக அமைப்பதற்கும் மற்றும் குடிநீர் குழாய் வால்வு திருப்பும் தொட்டி அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.97 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 33**

நகர்மன்ற கூட்ட அரங்கில் உள்ள மைக்குகள் பழுதடைந்துள்ளதால், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், புதியதாக இரண்டு நவீன மைக்குகள் (Cardless Mic) கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.20,000/-ல் பணி மேற்கொள்ள 15.05.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.S. யுவராஜ்,<br>66E3H, அய்யன் தோட்டம்,<br>பி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் | 19048.00 |
| 2) | தமிழ்நாடு எண்டர்பிரைசஸ்,<br>16-A-2, இளங்கோ தெரு, எடப்பாடி மெயின் ரோடு,<br>குமாரபாளையம். | 19706.00 |
| 3) | Zenith Tubes & Pipes<br>2/58, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | 19791.00 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.98 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 34**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள 31 கழிப்பிடங்கள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்கழிப்பிடங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட பணியினை பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.99 நாள்.09.07.2026.**

**பதிவுசெய்யப்பட்டது.**

**பொருள் எண் 35**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி ஆண்டு பங்குதொகை 2026 - 2027 ஆம் ஆண்டிற்கு ரூ.30,000/-ஐ நகராட்சி பொது நிதியில் வழங்க மன்ற அனுதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிவழங்கலாம்.

**தீர்மான எண்.100 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 36**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் கடந்த 2021-22 ம் ஆண்டு முதல் 2023-24 ம் ஆண்டு வரை பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு செலுத்தப்பட்ட வைப்புதொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் திரு.கே.எஸ்.மாரியப்பன், பவானி அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | Tender Deposite | Additional Security Deposite | Withheld | நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2023-24<br>புதியதாக 7.50 திறன் கொண்ட கூடுதல் 5 எண்ணிக்கைகள் நீர்மூழ்கி மின்மோட்டார் கொள்முதல் செய்தல் | 6000 | - | - | 25.05.2023 |
| 2 | பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள குழாய்கள் மற்றும் அக்ரஹாரம் நீரேற்று நிலையத்தில் பயனற்று வைக்கப்பட்டுள்ள பொருட்கள் ஏலம் விடப்பட்டது | 5000 | - | - | 12.07.2023 |
| 3 | பள்ளிபாளையம் நகராட்சியில் புதன்சந்தை வளாகத்தில் பொதுக்கழிப்பிடத்திற்கு முகப்பு பணிகள் மற்றும் PVC தடுப்புகள் அமைக்கும் பணி | 1920 | - | - | 20.10.2023 |
| 4 | பள்ளிபாளையம் நகராட்சியில் புதன்சந்தை வளாகத்தில் பொதுக்கழிப்பிடத்திற்கு முகப்பு பணிகள் மற்றும் PVC தடுப்புகள் அமைக்கும் பணி | 780 | - | - | 20.10.2023 |
| 5 | புதிய அங்கன்வாடி மையம் கட்டும் பணி - - 1 வார்டு 13 கண்டிபுதூர் பள்ளி வளாகம் (மையத்தின் எண் 14, மையத்தின் பெயர் கண்டிப்புதூர் பழனியப்பா நகர்) | 13500 | - | - | 26.10.2023 |
| 6 | புதிய அங்கன்வாடி மையம் கட்டும் பணி - - 1 வார்டு 13 கண்டிபுதூர் பள்ளி வளாகம் (மையத்தின் எண் 13, மையத்தின் பெயர் கண்டிப்புதூர் பாறைரோடு) | 13500 | - | - | 26.10.2023 |
| 7 | மண் சாலையினை சிமெண்ட் சாலை அமைக்கும் பணி பகுதி வார்டு 7 வாய்க்கால் ரோடு | 10000 | - | - | 26.10.2023 |
| 8 | மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்து சிமெண்ட் சாலை அமைக்கும் பணி பகுதி வார்டு 7 வாய்க்கால் ரோடு குறுக்கு சந்து (டெக்ஸ்மோ பேக்ட்ரி எதிரில்) | 5000 | - | - | 26.10.2023 |
| 9 | ஆவாரங்காடு பகுதியில் உள்ள நுண் உர மைத்திற்கு புதியதாக Shredder Machine கொள்முதல் செய்தல் | 6000 | - | - | 04.01.2024 |
| 10 | அக்ரஹாரம் பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் 30 எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் பழுதுகளை சரிசெய்யும் பணி | 2250 | - | - | 04.01.2024 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | அக்ரஹாரம் சுத்திகரிப்பு நிலையத்தில் 50 எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் பழுதுகளை சரிசெய்யும் பணி | 1250 | – | – | 04.01.2024 |
| 12 | ஆண்டிக்காடு 1வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 13300 | – | – | 20.02.2024 |
| 13 | வெடியரசம்பாளையம் ஆண்டிக்காடு 2வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 14700 | – | – | 20.02.2024 |
| 14 | மாதாபுரம் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்தில் முதல் தளம் கட்டும் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 24600 | – | – | 20.02.2024 |
| 15 | அம்மன் கோவில் வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் சாலை அமைத்தல் | 21300 | – | – | 20.02.2024 |
| 16 | பள்ளிபாளையம் நகராட்சிக்கு ஒரு எண்ணிக்கை புதிய 10 H.P திறன் கொண்ட ஆழ்துளை நீர்மூழ்கி மின்மோட்டார் கொள்முதல் செய்யும் பணி | 900 | – | – | 28.03.2024 |
| 17 | பள்ளிபாளையம் நகராட்சிக்கு 2 எண்ணிக்கை 7.50 H.P மற்றும் 4 எண்ணிக்கை 5 H.P திறன் கொண்ட ஆழ்துளை நீர்மூழ்கி மின்மோட்டார் கொள்முதல் செய்யும் பணி | 9000 | – | – | 28.03.2024 |
| 18 | வார்டு எண் 9 ஜீவா செட் பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பகுதியில் செல்லும் குடிநீர் பிரதான குழாயினை மாற்றி சாலையின் ஓரம் பதிக்கும் பணி | 1650 | – | – | 28.03.2024 |
| 19 | அக்ரஹாரம் சுத்திகரிப்பு நிலையத்தில் 50 எச்.பி. மோட்டார் மற்றும் 45 KW AC Drive கொள்முதல் செய்து பொருத்தும் பணி | 9900 | 9900 | 49366 | 08.10.2021 |

மேற்காணும் வைப்பு தொகையினை திரு.கே.எஸ்.மாரியப்பன், பவானி ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.405/2025/சி1**

**தீர்மான எண்.101 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 37**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் கடந்த 2019 ம் ஆண்டு முதல் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு செலுத்தப்பட்ட வைப்புதொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் M/s. சக்தி அசோசியேட்ஸ், பவானி அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும்

காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | Tender Deposite | Additional Security Deposite | Withheld | நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2022–23 வார்டு 3 நாட்டாக்கவுண்டன்புதூர் பகுதியில் படித்துறை அமைத்தல் | 19000 | 19000 | – | 06.10.2023 |
| 2 | வார்டு எண் 3 தில்லைநகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 3000 | 3000 | 15000 | 29.09.2023 |
| 3 | வள்ளி மணவாளன் திருமணம் மண்டபம் பின்புறம் கழிப்பிடம் கட்டுதல் | 9000 | 9000 | – | 05.01.2022 |
| 4 | வார்டு எண் 4 வள்ளி மணாளன் திருமண மண்டபம் அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு கேட் மற்றும் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 2900 | 2900 | 14391 | 14.09.2023 |
| 5 | வார்டு எண் 1 முதல் 21வது வார்டு வரை பிளம்பிங் பணிசெய்தல் | – | – | 210583 | 25.02.2019 |
| 6 | வார்டு எண் 1 முதல் 21வது வார்டு வரை பழுதடைந்த தரைத்தளங்கள் சரிசெய்தல் | 4500 | 4500 | 23000 | – |
| 7 | பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள கான்கீரிட் வீதிகளில் ஏற்பட்டுள்ள உடைப்புகள், வீதி ஓரங்களில் உள்ள வாய்க்கால் உடைப்புகள் மற்றும் பழுதடைந்த மூடுகல் அமைக்கும் பணி | 4000 | 4000 | 19035 | 18.04.2022 |
| 8 | வார்டு எண் 1 கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள பழுதடைந்த படித்துறை மற்றும் கான்கீரிட் பாதையினை சீரமைத்தல் | 4500 | 4500 | 22122 | 13.03.2024 |
| 9 | வார்டு எண் 7 வாய்க்கால் ரோடு மற்றும் வார்டு எண் 21 கண்ணனூர் மாரியம்மன் பகுதி மற்றும் அம்மன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 6000 | 6000 | 30000 | 29.09.2023 |

மேற்காணும் வைப்பு தொகையினை M/s. சக்தி அசோசியேட்ஸ், பவானி ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.633/2026/சி1**

**தீர்மான எண்.102 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 38**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் கடந்த 2022–23 ம் ஆண்டு வரை பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு செலுத்தப்பட்ட வைப்புதொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் M/s. SRV கன்ஸ்ட்ரக்சன்ஸ், பள்ளிபாளையம் அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | Tender Deposite | Additional Security | Withheld | நாள் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | Deposite | | |
| 1 | 2022–23<br>வார்டு எண்.21 கண்ணனூர் மாரியம்மன் கோவில் அருகில் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணி | 1200 | 1200 | 6000 | 05.04.2023 |
| 2 | கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் கழிப்பிடம் கட்டும் பணி செய்தல் | 10000 | 10000 | 50000 | 24.11.2023 |
| 3 | வார்டு எண் 21 பெரியகாடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 3000 | 3000 | 15000 | 13.07.2023 |
| 4 | 10வது வார்டு பெரும்பாறைக்காடு கழிப்பிடம் அருகில் சிறுபாலம், நேருநகர் 1வது குறுக்குத்தெரு, 11வது வார்டு முனியப்பன் கோவில் 3வது தெரு, 12வது வார்டு ஈ.ஆர்.தியேட்டர் ரோடு குறுக்கு வீதி, 13வது வார்டு சின்னவீதி, 5வது வார்டு முனியப்பன் கோவில் பின்புறம், 9வது வார்டு திருச்செங்கோடு ரோடு முதல் நகராட்சி ரோடு வரை, 7வது வார்டு வாய்க்கால் ரோடு, 8வது குறுக்கு தெரு, 3வது வார்டு தில்லை நகர் மழைநீர் வடிகால் மற்றும் 11வது வார்டு முனியப்பன் கோவில் 2வது தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் | 30000 | 30000 | 141904 | 29.09.2023 |
| 5 | பள்ளிபாளையம் நகராட்சி அரசு மருத்துவமனை வளாகத்தில் மண் தளத்தினை பேவர் பிளாக் தளமாக மேம்படுத்தும் பணி | 12000 | – | – | 18.07.2023 |
| 6 | வார்டு எண் 1 கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள பழுதடைந்த படித்துறை மற்றும் கான்கீரிட் பாதையினை சீரமைத்தல் | 4500 | 4500 | 22122 | 13.03.2024 |
| 7 | ஆவாரங்காடு பகுதியில் உள்ள நுண் உர மைத்திற்கு புதியதாக Shredder Machine கொள்முதல் செய்தல் | 6000 | 6000 | 29726 | 03.01.2024 |
| 8 | 10வது வார்டு நேரு நகர் 3வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3000 | 3000 | 15000 | 20.12.2022 |
| 9 | வார்டு எண் 9 ஜீவாசெட் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அருகில் உள்ள வாட்டர் ஏ.டி.எம்.இயந்திரத்திற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் | 3000 | 3000 | 13353 | 09.06.2022 |

மேகாணும் வைப்பு தொகையினை M/s. SRV கன்ஸ்ட்ரக்சன்ஸ், பள்ளிபாளையம் ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.625/2026/சி1**

**தீர்மான எண்.103 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் 39

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் கீழ்கண்டுள்ள குத்தகை இனம் 2024–2025 முதல் 2026–2027 வரை ஏலம் எடுத்தவர்கள் ஏலத்தொகையை செலுத்தாத காரணத்தினால் ஏலத்தை ரத்து செய்து 01.04.2026 முதல் 31.03.2029ம் வரை 3 ஆண்டுகளுக்கான மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படவும், ஏல அறிவிப்பை மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்தவும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை விபரம் |
|---|---|
| 1 | வார சந்தை (புதன் சந்தை) சுங்கம் வசூல் செய்யும் உரிமை |
| 2 | புதன் சந்தை ஆண் / பெண் பொது கழிப்பிடம் |
| 3 | OHT டேங்க் அருகில் ஆண் / பெண் கழிப்பிடம் |
| 4 | ஆவாரங்காடு ஆடு அடிக்கும் தொட்டி |
| 5 | மீனவர் தெரு பெண்கள் கழிப்பிடம் |
| 6 | பெரியகாடு காமராஜ் நகர் பெண்கள் கழிப்பிடம் |
| 7 | கண்டிப்புதூர் பெட்டிக்கடை |
| 8 | முஸ்லீம் தெரு பெண்கள் கழிப்பிடம் |
| 9 | ஆர்.எஸ்.ரோடு பெண்கள் கழிப்பிடம் |
| 10 | சத்யா நகர் ஆண்/பெண் கழிப்பிடம் |

மேலும் 01.04.2025 முதல் 19.04.2026 வரை 20 முறை ஏலம் விடப்பட்டு நாளது தேதி வரை ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை எனவே கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை விபரம் |
|---|---|
| 1 | கே.ஆர்.பி.ஏ.டி. ரோடு (ஆண்கள்) கழிப்பிடம் |
| 2 | நாட்டா கவுண்டன் புதூர் அருகில் உள்ள ஆண்/பெண் கழிப்பிடம் |
| 3 | வார சந்தை (சனி சந்தை) சுங்கம் வசூல் செய்யும் உரிமை |
| 4 | எம்.ஜி.ஆர். நகர் முருகன் கோவில் அருகில் உள்ள (பெண்கள்) கழிப்பிடம் |

**அலுவலக குறிப்பு :**

1. ஆண்டு குத்தகை 14 இனங்கள் 01.04.2026 முதல் 31.03.2029 வரை 3 ஆண்டுகளுக்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது ஏலம் விட அனுமதிக்கலாம்.
2. ஏல அறிவிப்பை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.146/2026/அ1**

**தீர்மான எண்.104 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் 40

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**கோப்பு எண்.791/2026/சி1**

**தீர்மான எண்.105 நாள்.09.07.2026.**

**பதிசெய்யப்பட்டது.**

பொருள் எண் 41

பள்ளிபாளையம் நகராட்சியில் TN-77 R-6798 Bolero வாகனம், TN-34 D-4081 bolero என இரண்டு ஈப்பு வாகனம் உள்ளது. இந்நிலையில் TN-34 D-4081 bolero ஈப்பு வாகனம் கடந்த 2005 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு சுமார் 18 வருடங்கள் ஆன நிலையில் 5,30,000 கி.மீட்டர் தூரம் ஓடியுள்ளதால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மேலும், ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் பணிகளை ஆய்வு செய்யவும், நாமக்கல் மற்றும் சேலம் ஆய்வுக்கூட்டத்திற்கு செல்லவும் ஒரே வாகனத்தை TN-77 R-6798 Bolero வாகனத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே TN-34 D-4081 Bolero

வாகனத்திற்கு பதிலாக புதிய Bolero வாகனம் கொள்முதல் செய்வது அவசியமாக உள்ளது. இந்நகராட்சிக்கு என புதியதாக Bolero வாகனம் (GeM விலைக்கு) சிறப்பு அரசு விலையில் கொள்முதல் செய்யவும், மேற்கண்ட வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Mahindra & Mahindra Limited நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.808/2026/இ1**

**தீர்மான எண்.106 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 42**

பள்ளிபாளையம் நகராட்சி பொதுபிரிவு, பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் பிரிண்டருக்கான கருப்பு மற்றும் கலர் டோனர்கள் முடிவடைந்து விட்டதால் பிரிண்ட் எடுப்பதற்கும், ஜெராக்ஸ் எடுப்பதற்கும் இயலாத நிலையில் உள்ளது. ஆகையால் புதியதாக பொதுப்பிரிவு, பொதுசுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பிரிண்டர்களுக்கு தேவையான கருப்பு மற்றும் கலர் டோனர்கள் கீழ்கண்டவாறு கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக் கொள்வதற்கு 11.05.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | பொது சுகாதார பிரிவு | | | கருப்பு டோனர் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | கலர் டோனர் ரூ | கருப்பு டோனர் ரூ | எண்ணிக்கை | பொதுப் பிரிவு ரூ | பொறியியல் பிரிவு ரூ |
| 1) | கிராபிடெக் இமேஜினி சொலுயூசன்ஸ், 28/1, ராமகிருஷ்ணாபுரம் வடக்கு, சிட்ரா எதிர்புறம், கரூர்-639 001. | 5 | 51654.00 | 17818.00 | 5 | 22536.00 | 11526.00 |
| | | | **103534 + GST 18% 18636 (Total)** | | | | **122170.00** |
| 2) | சி.எஸ்.இன்போடெக், 7/D/E-O, 79-N , ராமகிருஷ்ணாபுரம் மேற்கு, கரூர்-639001 | 5 | 52554.00 | 18200.00 | 5 | 23145.00 | 11900.00 |
| | | | **105799 + GST 18% 19044 (Total)** | | | | **124843.00** |
| 3) | இன்-சைனிக், 172/3, ராமலிங்கம் ரோடு மேற்கு.ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-641 002. | 5 | 52800.00 | 18300.00 | 5 | 23250.00 | 12000.00 |
| | | | **106350 + GST 18% 19143 (Total)** | | | | **125493.00** |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை பொது நிதியில் இருந்து வழங்கியதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.80/2026/இ1**

**தீர்மான எண்.107 நாள்.09.07.2026.**

பதிவுசெய்யப்பட்டது.

<u>பொருள் எண் 43</u>

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடத்திற்கு புதியதாக மின்மோட்டார் அமைத்து தண்ணீர் வசதி செய்வதற்கும், மின்இணைப்பு பெறுவதற்கும், அதற்கான ஒயரிங் பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,12,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.108 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 44</u>

பள்ளிபாளையம் நகராட்சியின் அக்ரஹாரம் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Pre Cholorination and Post Cholorination 2026-27ஆம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு செலவினத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.109 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண் 45</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் ஈரோடு, சேலம் மார்க்கம் மற்றும் திருச்செங்கோடு, ஈரோடு மார்க்கம் செல்லும் பேருந்துகள் நின்று செல்லும் பேருந்து நிறுத்தத்தில் 2 பயணிகள் நிழற்கூடங்களும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிக்காக அப்புறப்படுத்தப்பட்டது, தற்போது கோடை காலம் என்பதால் வெயிலின் தாக்கம் அதிகளவில் இருப்பதால் பொதுமக்களின் நலன் கருதி, பள்ளிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மேற்படி பகுதிகளில் தற்காலிக பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணியினை ரூ.4,00,000/-ல் பணி மேற்கொள்ள 30.03.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.S. யுவராஜ்,<br>66E3H, அய்யன் தோட்டம்,<br>பி, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் | ரூ. 320813/- |
| 2) | Zenith Tubes & Pipes<br>2/58, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் | ரூ. 351674/- |
| 3) | தமிழ்நாடு எண்டர்பிரைசஸ்,<br>16-A-2, இளங்கோ தெரு, எடப்பாடி மெயின் ரோடு,<br>குமாரபாளையம். | ரூ. 363676/- |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், தமிழ்நாடு நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7ன் படி )குறைவான விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதற்கும், பட்டியல் தொகை பொதுநிதியில் இருந்து வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.1923/2025/இ1**

**தீர்மான எண்.110 நாள்.09.07.2026.**

பதிவுசெய்யப்பட்டது.

**<u>பொருள் எண் 46</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.DMA/1956/2026M1 நாள்.02.06.2026ன் சுற்றறிக்கையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் ஒப்பந்தகாலம் முடிவு பெறுவதை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்தும், இம் மூன்று மாதங்களுக்குள் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கும் பணி மேற்கொள்ள தெரிவித்துள்ளதற்கிணங்க, பள்ளிபாளையம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி 3 பள்ளிகள், ஆலாம்பாளையம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள 6 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு பயின்று வரும் பள்ளி குழந்தைகள் SPB காலனியில் (அரசு உதவி பெறும் பள்ளி) பயிலும் 1 பள்ளி மொத்தமுள்ள 10 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் காலை உணவு திட்டம் M/s.Sapthagiri Catering Service, Erode என்ற ஒப்பந்ததாரர் பெயரில் கடந்த 29.05.2023 தேதியன்று ஒப்பந்தம் போடப்பட்டு காலை உணவு வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது ஒப்பந்த காலம் மே 2026 ல் முடிவுருவதால் மீண்டும் அதே ஒப்பந்ததாரருக்கு 3 மாத காலத்திற்கு (ஜீன் 2026 முதல் ஆகஸ்ட் 2026 வரை) நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.394/2023/இ1**

**தீர்மான எண்.111 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 47</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் குடிநீர்நிதி 2025–2026 ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள HDPE குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்வதற்கு தேவையான HDPE குழாய்களை கொள்முதல் செய்யும் பணிக்கு 03.02.2026ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் திரு.எ.செந்தில்குமார் திருப்பூர் அவர்களுக்கு 18.02.2026ல் பணிஉத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியில் நாளது தேதி வரை HDPE குழாய்கள் கொள்முதல் செய்யாமல் காலம் தாழ்த்தி வருவது குறித்து பலமுறை நேரில் அறிவுறுத்தியும், இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டும், நாளது தேதி வரை பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததால், மேற்படி பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.எ.செந்தில்குமார் திருப்பூர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியினை இரத்து செய்தும் இதற்காக ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை நகராட்சி கணக்கில் வராவக்கப்பட்டு, புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1855/2025/இ1**

**தீர்மான எண்.112 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 48</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் குடிநீர்நிதி 2025–2026 ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி பகுதிகளில் புதியதாக பதிக்கப்பட்டுள்ள HDPE பைப்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய பைப்புகளை இணைக்கும் இயந்திரம் புதியதாக வாங்கும் பணிக்கு 21.01.2026ல் விலைப்புள்ளி கோரப்பட்டு, விலைப்புள்ளிதாரர் திரு.எ.செந்தில்குமார் திருப்பூர் அவர்களுக்கு 21.01.2026ல் பணிஉத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு பலமுறை நேரில் அறிவுறுத்தியும், இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டும், நாளது தேதி வரை பணியினை மேற்கொள்ளாமல் இருந்ததால், மேற்படி பணிக்கு விலைப்புள்ளிதாரர் திரு.எ.செந்தில்குமார் திருப்பூர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிஉத்திரவினை இரத்து செய்து, புதியதாக விலைப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1855/2025/இ1**

**தீர்மான எண்.113 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 49</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதி வாழ் பொதுமக்கள் ஆவாரங்காடு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடத்தில் திருமணம், வரவேற்பு மற்றும் இதர விசேஷ

நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின் உணவு பரிமாறப்படும் இலைகள் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்தி மண்டபங்களை சுத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு ஏற்படும் கழிவுகளை அப்புறப்படுத்தும் பொருட்டு (ஒரு நிகழ்ச்சி = ரூ. 2500 சராசரியாக மாதம் 10 நிகழ்ச்சிகள் = ரூ. 25000 /-ம் எனவே 12 மாதம் x ரூ.25000 = ரூ.3,00,000/-) மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 3,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.114 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 50**

பள்ளிபாளையம் நகராட்சியின் சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் இரண்டு எண்ணிக்கை 60 H.P. மோட்டார் மற்றும் அக்ரஹாரம் சுத்திகரிப்பு நிலையத்தில் இயங்கி வரும் இரண்டு எண்ணிக்கை 50 H.P. மோட்டார் மற்றும் இரண்டு எண்ணிக்கை 60 H.P. மோட்டார் ஆகியவற்றிற்கு 2026-27ஆம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.115 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 51**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து செல்லும் குழாய் பராமரிப்பு பணி, குடிநீர் பகிர்மானக் குழாய் பழுது பராமரிப்பு பணி, கழிப்பிடங்களில் உள்ள குழாய் பராமரிப்பு பணி போன்ற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில், தற்காலிகமாக ஒப்பந்த முறையில் 12 பணியாளர்களை கொண்டு பணிமேற்கொள்வதற்கு ஏற்கனவே உள்ள ஒப்பபந்ததாரர் திருவாளர்கள்.ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ், கொமாரபாளையம் என்ற நிறுவனத்தின் மூலம் (ஆகஸ்ட் 2026 முதல் அக்டோபர் 2026) 3 மாதத்திற்கு அதே விலை விகிதத்தின்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.8,50,000/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.361/2025/இ1**

**தீர்மான எண்.116 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 52**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் கீழ்கண்டுள்ள குத்தகை இனம் 2024-2025 முதல் 2026-2027 வரை ஏலம் எடுத்தவர்கள் ஏலத்தொகையை நாளது தேதி வரை செலுத்தாத காரணத்தினால் ஏலத்தை ரத்து செய்ய மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை விபரம் | ஏலம் எடுத்தவர்களின் பெயர் மற்றும் முகவரி | செலுத்த வேண்டிய குத்தகை தொகை |
|---|---|---|---|
| 1 | கண்டிப்புதூர் பெட்டிக்கடை | திரு கே.மனோகரன், 268-124, ஆவாரங்காடு மேற்கு, பள்ளிபாளையம். | ரூ.29,505/- (GST) தொகை ரூ.5,311/- |
| 2 | பெரியகாடு காமராஜ் நகர் | திரு.எஸ். சந்திரசேகரன், த/பெ.சுப்ரமணி, 28B-1, காமராஜ் நகர், ஆலாம்பாளையம், பள்ளிபாளையம். | ரூ.19,215/- |

| | | | |
|---|---|---|---|
| 3 | முஸ்லீம் தெரு கழிப்பிடம் | திரு.எம். கந்தசாமி,<br>66, ஆவாரங்காடு மேற்கு<br>பள்ளிபாளையம். | ரூ.5,040/- |
| 4 | வார சனி சந்தை | திரு. கந்தசாமி<br>66, ஆவாரங்காடு மேற்கு,<br>பள்ளிபாளையம். | ரூ.2,02,740/- |
| 5 | ஆர்.எஸ்.ரோடு அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடம் | திருமதி. நாகமணி,<br>87-1, VOC நகர்,<br>பள்ளிபாளையம். | ரூ.26,475/- |
| 6 | நாட்டான்கவுண்டன் புதூர் ஆண்கள் கழிப்பிடம் | திருமதி. மீரா,<br>க/பெ. வாசுதேவன்,<br>49, ஓங்காளியம்மன் கோவில் வீதி, அக்ரஹாரம்,<br>பள்ளிபாளையம். | ரூ.25,765/- |
| | | **மொத்தம்** | **ரூ.3.14.051/-** |

அலுவலக குறிப்பு:

1. பள்ளிபாளையம் நகராட்சி குத்தகை இனங்கள் 2025-2026ஆம் ஆண்டிற்கான குத்தகை தொகை மேற்கண்ட பட்டியல் உள்ளவர்கள் ரூ.3,14,051/- தொகை செலுத்தப்படவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

2. மேற்குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் பள்ளிபாளையம் நகராட்சியில் எந்தவொரு பொது ஏலம் மற்றும் பொது ஒப்பந்தப்புள்ளியிலும் கலந்து கொள்ளாத வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை 781/ஆர்-2/2025 நாள்.06.02.2025ன் படி உரிமத்தினை ரத்து செய்து வைப்புத்தொகை பறிமுதல் செய்து கருப்பு பட்டியலில் (Block List) சேர்க்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

**கோப்பு எண்.361/2025/இ1**

**தீர்மான எண்.117 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 53</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் கல்விநிதி 2025-2026 ஆம் ஆண்டின் கீழ் 17வது வார்டு ஆவாரங்காடு கிழக்கு (பாரதியார் தெரு) பகுதியில் அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு 21.07.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் திரு.கே.கண்ணன், பள்ளிபாளையம் அவர்களுக்கு 29.09.2025ல் பணிஉத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியில் நாளது தேதி வரை பணி நடைபெறும் இடத்தினை சுத்தம் செய்யும் பணி மட்டுமே முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெறாமல் உள்ளது குறித்து பலமுறை நேரில் அறிவுறுத்தியும், இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் 2 முறை வழங்கப்பட்டும், நாளது தேதி வரை பணியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததால், மேற்படி பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.கே.கண்ணன், பள்ளிபாளையம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணியினை இரத்து செய்தும் இதற்காக ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையினை நகராட்சி கணக்கில் வராவுவைக்கப்பட்டு, புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.721/2025/இ1**

**தீர்மான எண்.118 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 54</u>**

சாலையோர வியாபாரிகளின் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணைவிதிகள் 2018ன் படி பள்ளிபாளையம் நகராட்சியின், நகர விற்பனைக்குழு கூட்டம் 05.03.2026 நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் வியாபார பகுதி (Non Vending Zone) வியாபாரம் தடைசெய்யப்பட்ட பகுதி (Non Vending Zone) மற்றும் வரையறுக்கப்பட்ட வியாபார பகுதி (Restricted Vending Zone) முதலியவை குறித்து முடிவெடுக்கப்பட்டது. நகர விற்பனை குழுவின் பொருள் இணைக்கப்பட்டுள்ளது. இப்பொருள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.780/2014/எப்1

**தீர்மான எண்.119 நாள்.09.07.2026.**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண் 55**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் கடந்த 2020–21 ம் ஆண்டு வரை பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு செலுத்தப்பட்ட வைப்புதொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் திரு.கே.சீரங்கன், எலந்தக்குட்டை அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | Tender Deposite | Additional Security Deposite | Withheld | நாள் |
|---|---|---|---|---|---|
| | 15வது நிதிக்குழு (Tied Grant) 2020–21 | | | | |
| 1 | வார்டு எண்.10 மாதாபுரம் ஆண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 3500 | 8069 | 04.01.2022 |
| 2 | வார்டு எண்.10 மாதாபுரம் பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 3500 | 12347 | 04.01.2022 |
| 3 | வார்டு எண்.21 செங்குந்தர் மண்டபம் அருகில் பழைய கழிப்பிடம் அகற்றி விட்டு புதிய கழிப்பிடம் கட்டுதல் | 9500 | 9500 | 47500 | 04.01.2022 |
| | 15வது நிதிக்குழு (Un Tied Grant) 2020–21 | | | | |
| 1 | வார்டு எண் 15 பெரியார் நகர் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 6500 | 6500 | 32500 | 04.01.2022 |
| 2 | வார்டு எண் 15 பெரியார் நகர் பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 4500 | 4500 | 11867 | 04.01.2022 |
| | 15வது நிதிக்குழு (Tied Grant) 2021–22 | | | | |
| 1 | வார்டு எண்.3 அக்ரஹாரம் ராஜவீதி ஆண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 4500 | 4500 | 22500 | 04.01.2022 |
| 2 | வார்டு எண்.3 அக்ரஹாரம் ராஜவீதி பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 3500 | 16109 | 04.01.2022 |

மேற்காணும் வைப்பு தொகையினை திரு.கே.சீரங்கன், எலந்தக்குட்டை ஒப்பந்தாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.763/2026/சி1

**தீர்மான எண்.120 நாள்.09.07.2026.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 56**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் கடந்த 2020–21 ம் ஆண்டு வரை பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு செலுத்தப்பட்ட

வைப்புதொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் திரு.ப.தனபாலன், ஈரோடு அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் ஒத்திசைவு செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | Tender Deposite | நாள் |
|---|---|---|---|
| | 15வது நிதிக்குழு (Tied Grant) 2020–21 | | |
| 1 | வார்டு எண்.10 மாதாபுரம் ஆண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 04.01.2022 |
| 2 | வார்டு எண்.10 மாதாபுரம் பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 04.01.2022 |
| 3 | வார்டு எண்.21 செங்குந்தர் மண்டபம் அருகில் பழைய கழிப்பிடம் அகற்றி விட்டு புதிய கழிப்பிடம் கட்டுதல் | 9500 | 04.01.2022 |
| | 15வது நிதிக்குழு (Un Tied Grant) 2020–21 | | |
| 1 | வார்டு எண் 15 பெரியார் நகர் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 6500 | 04.01.2022 |
| 2 | வார்டு எண் 15 பெரியார் நகர் பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 4500 | 04.01.2022 |
| | 15வது நிதிக்குழு (Tied Grant) 2021–22 | | |
| 1 | வார்டு எண்.3 அக்ரஹாரம் ராஜவீதி ஆண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 4500 | 04.01.2022 |
| 2 | வார்டு எண்.3 அக்ரஹாரம் ராஜவீதி பெண்கள் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 3500 | 04.01.2022 |

மேற்காணும் வைப்பு தொகையினை திரு. ப.தனபாலன், ஈரோடு ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.763/2026/சி1**

**தீர்மான எண்.121 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 57**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 காவல் நிலையம் எதிரில், திலகம் பெட்ரோல் பங்க் முன்புறம் தெற்கு பார்த்து காலியிடமாக 1650 சதுர அடி இடமானது இந்நகராட்சிக்கு சொந்தமான இடமாகும். இவ்விடத்தினை 2026–27 முதல் நகராட்சி மூலம் குத்தகை முறையில் ஏலம் விடுவதற்கு நாமக்கல் மாவட்ட அரசிதழில் குத்தகை ஏல அறிவிப்பு செய்தி வெளியிடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.122 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 58</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 சரவணா நகர் பகுதியில் சேகரமாகும் கழிவுநீரானது HDPE பைப்லைன் மூலமாக கழிவுநீரினை சேகரித்து மின்மோட்டார் கொண்டு உறிஞ்சுப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போது கழிவுநீர் தொட்டியில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீரினை மோட்டார் மூலம் வெளியேற்ற இயலாத காரணத்தினால் கழிவுநீர் தொட்டி முழுவதும் நிரம்பி அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளதால், அங்கு புதியதாக 5HP (Non Clog Motor) மோட்டார் மூலம் கழிவுநீரினை வெளியேற்றுவதற்கு ஆகும் செலவினம் ரூ.8,00,000/- க்கு மன்ற பொருள் ஆணையாளர் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.123 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 59</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.20383/2022/H2 நாள்.02.07.2026ன்படி, பள்ளிபாளையம் நகராட்சிக்கு புதியதாக நாய்கள் பிடிக்கும் வாகனத்தினை ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளுமாறும், அதற்கான GeM Catalogue உடன் இணைத்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் வரப்பெற்ற நிர்வாக அனுமதியினை மன்றத்தின் பார்வைக்கும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண்.807/2026/இ1**

**தீர்மான எண்.124 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 60</u>**

மாவட்ட ஆட்சியத் தலைவர், நாமக்கல் அலுவலகத்தில் நடைபெறும் சுதந்திர நாள் தினவிழாவிற்கு ஒலிபெருக்கி சாதனங்கள், பதாகைகள், விழாநிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கு வழங்க வேண்டிய நகராட்சி பங்குத் தொகை மற்றும் பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் சுதந்திர தினவிழாவிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.125 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 61</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டு பகுதிக்கும் அக்ரஹாரம் நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு சுத்திகரிப்பு மையங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீரானது வழங்கப்பட்டு வருகிறது. சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் நீர் நன்கு சுத்திகரிக்கப்பட்டு சிறந்த முறையில் குளோரினேசன் செய்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு குளோரின் கேஸ் சிலிண்டர்கள் (900kg) பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நவம்பர் 2025 உடன் முடிவடைந்ததால், பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி ரூ.2,97,000/-ல் பணி மேற்கொள்ள 13.03.2026 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் /முகவரி | தொகை ரூ (1 எண்ணிக்கை) |
|---|---|---|
| 1) | M/s. சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ்<br>96,திண்டல் மாணிக்கம்பாயைம்<br>திண்டல்-638012 | 24,675.00 |
| 2) | M/s. ஜீபிடர் எண்டர்பிரைஸ்,<br>SFNo,221/1/222/2, தில்லை பாலாஜி கார்டன்,<br>திண்டல்-638012 | 24,980.00 |

| | | |
|---|---|---|
| 3) | ஜெய்கணேஷ் டிரேடர்ஸ்<br>55D. கலைஞர் நகர்,<br>வெள்ளோடு, ஈரோடு–638112 | 25,249.00 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவாளர்கள் M/s. சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ், திண்டல் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், செலவினத்தை குடிநீர்நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.126 நாள்.09.07.2026.**

**அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) மோ.செல்வராஜ்,**
**தலைவர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**